திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மொத்தம் தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கர் ல் காப்பி பயிரிடுகிறார்கள்? இரண்டாவதாக, பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் அந்தக் காப்பி போர்டில் இருக்கிறார்கள், தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே உறுப்பினர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒன்று, ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இரண்டு, தனிக்கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற வினாக்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10–00.]

2. உரிமைப் பிரச்னைகள்.

(அ) உணவுத் துறை அமைச்சர் மீது.—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (26–3–79) திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். அதற்கு 27–3–77 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய விளக்கத்தை அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, 20–3–77-ந்தேதி இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம் கொடுக்கின்ற நேரத்தில் இந்த அவைக்கு உண்மைக்குப் புறம்பான சில தகவல்களை வேண்டுமென்றே நான் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் என்மீது நேற்றைய தினம் உரிமை மீறல் பிரச்சனை ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்கு நான் இந்த அவையிலே விளக்கம் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

1979 மார்ச் 27] [திரு. க. உரோ, எட்மண்ட்]

நேற்றைய தினம் அவர் என்மீது கொண்டுவந்த அவை உரிமை மீறல் பிரச்னையின் மூலம் எவ்வளவு தவறான எண்ணங்கள் நாட்டிலே பரப்பப்பட்டிருக்கின்றன என்பதை பத்திரிகையில் படித்தவர்கள் உண்மையிலேயே புரிந்திருப்பார்கள். என்மீது கொண்டுவரப்பட்ட உரிமை மீறல் பிரச்னை அவையிலே தவறான தகவல்களை வேண்டுமென்றே அமைச்சர் தந்தார் என்று கொண்டுவரப்பட்டிருந்தாலும் நேற்று மாலையிலே வெளி வந்த 'அலை ஓசை' பத்திரிகையைப் பார்க்கும்போது பெரிய ஊழல் இந்த நாட்டிலே நடைபெற்றிருப்பதாகவும், அந்த ஊழலை ஆதாரத்தோடு சுட்டிக்காட்டி, என்மீது உரிமைப் பிரச்னைக் கொண்டுவந்ததாகவும் செய்தி அலை ஓசை பத்திரிகையில் நேற்று வந்திருக்கிறது.

நான் இந்த நேரத்தில் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புவது, பத்திரிகை நடத்துகின்றவர்கள் கூட எந்த நோக்கத்தோடு உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவந்து பேசினார் என்று அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவையிலே நடைபெறுபவைகளை சரியாக கவனிக்காமல், எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்னை முழுமையாக முடிவடைவதற்கு முன்னால் பத்திரிகைகள் பெரிதாக விளம்பரப்படுத்தி, அரசுமீது அமைச்சர்கள்மீது சேற்றை வாரி வீசுகின்ற முயற்சியிலே பத்திரிகைகளும் நாட்டிலே இருக்கின்றன என்பதை மிகுந்த வேதனையோடு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

உரிமை மீறல் பிரச்னை பற்றி நான் இந்த அவையில் குறிப்பிட விரும்புவது இரண்டு பிரச்னைகள். தவறான தகவல்களை கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலாவதாக தமிழ் நாட்டிலே செயல்படுகின்ற பல்வேறு பொது நிறுவனங்கள் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன என்று நான் சொன்னது தவறு என்றும் அவை எல்லாம் நஷ்டத்திலே நடக்கின்றன என்றும் ஒரு உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டாவதாக, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியத்தைவிட மற்ற பொது நிறுவனங்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியம் குறைவாக இருக்கிறது என்று நான் சொன்னது தவறான செய்தி என்றும் உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, நான் மெத்த பணிவோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் குற்றச் சாட்டைக் கொண்டுவந்தவர்கள் அந்தக் குற்றச் சாட்டை நிரூபிக்க வேண்டிய பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்

கொண்டு ஆகவேண்டும். நான் கொடுத்த தகவல் தவறானது என்பதை எந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்னார்கள். எந்த ஆதாரத்தின் அடிப்படையிலே சொன்னார்கள் என்பதை அவர்கள் நேற்றைய தினம் நிச்சயமாக விளக்கிக் கூறவில்லை. அவர்கள் இந்த அவையிலே உரிமை மீறல் பிரச்னையில் பேசும்போது சொன்ன கருத்து எல்லாம் நாட்டிலே எல்லா பொது நிறுவனங்களும் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் அந்தக் குற்றச்சாட்டைக் கொண்டு வந்த உறுப்பினர் எந்த பொது நிறுவனங்கள் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன; எந்த எந்த பொது நிறுவனங்கள் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன; அதை எந்த ஆதாரத்தின் அடிப்படையிலே இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள் என்று நேற்றைய தினம் சொன்னார்களா என்றால் நிச்சயமாக சொல்லவில்லை.

இன்னொன்று, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள பணியாளர்களுக்கு கொடுக்கின்ற ஊதியம் மற்ற பொது நிறுவனங்களிலே உள்ள பணியாளர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தைவிட அதிகமாக இருக்கிறது என்று சொன்னது தவறு என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொல்லும்போது நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்படுகிறது; மற்ற பொது நிறுவனங்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்படுகிறது என்கின்ற ஆதாரத்தை புள்ளிவிவரங்களோடு இந்த அவையிலே உரிமை மீறல் பிரச்னை மீது பேசும்போது எடுத்துச் சொல்லவில்லை.

இன்னொன்றையும் சொன்னார்கள். நான் 20-ந்தேதி ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிகின்ற பல்வேறுபட்ட ஊழியர்களுக்கு கொடுக்கின்ற சராசரி சம்பள விகிதத்தை பற்றிச் சொன்னேன். அது டிபுட்டேஷனிஸ்டுகளுக்குத்தான் என்று அவர்கள் சொன்னார்கள். டிபுடேஷனிஸ்ட் என்றால் வேறு ஒரு துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஒருவர் இங்கே வந்து பணியாற்றுவது. அவர்களைப்பற்றி நான் சொன்னதாக அவர்கள் சொன்னார்கள்.

நான் இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற உயர் மட்ட அதிகாரிகளைக் கலந்து பேசிய நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்ன தகவல் தவறானது என்றும் டெபுடேஷனிஸ்ட்க்கு கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதம் முழுக்க முழுக்க மாறுபட்டது என்றும் 20 ஆம் தேதி, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதத்தைப் பற்றி, நான் சொன்னதுதான் சரி என்பதையும் அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

1979 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

ஆகவே ஆதாரங்களை முறைப்படி சேகரிக்காமல் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொல்லி என் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சொன்ன தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை, அவை தவறான தகவல்கள் என்பதை நிரூபிக்க தக்க ஆதாரங்களையோ அல்லது புள்ளி விவரங்களையோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றைய தினம் அவருடைய உரையிலே அவர் சொல்லவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 20 ஆம் தேதி நான் சொன்ன அந்தத் தகவல் அதாவது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்தச் சம்பள விகிதம்தான் உண்மையானது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதுதான் தவறானது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். சில நிறுவனங்கள் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன என்று, நான் சொன்னது தவறான தகவல் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் எந்த அடிப்படையிலே அவை தவறான தகவல்கள் என்பதற்கான ஆதாரத்தைக் கொண்டு வந்து இந்த அவையிலே அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை என்றாலும் நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக சில தகவல்களை இங்கே தருகிறேன். தமிழகத்திலே ஏறத்தாழ 42 பொது நிறுவனங்கள் இருக்கின்றன. நடப்பு ஆண்டின் கணக்கைப் பார்க்க வேண்டும் என்றால் அது 79 மார்ச்சு 31 ஆம் தேதியோடுதான் முடிவடையும். அப்போதுதான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்த பிறகுதான் அந்த நிறுவனங்கள் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றனவா, இல்லையா என்பது தெரியவரும். நான் இப்போது, கடந்த 1977—78-லே இப்படிப்பட்ட நிறுவனங்கள் பொதுவாக லாபத்திலே ஓடியதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய கவனத்திற்கு நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். அவர் சட்டம் படித்த வழக்கறிஞர். நானும் சட்டம் படித்தவன்தான். நானும் வழக்கறிஞராகப் பணியாற்றியவன்தான். ஆகவே அந்த மரியாதையோடு நான் அவருக்கு இந்தத் தகவல்களைத் தருகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், திரு. ரகுமான்கான் அவர்கள் வழக்கறிஞராக இருப்பதால் அவருக்கு மரியாதையோடு இந்தத் தகவலைத் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் எங்களுக்கெல்லாம் மரியாதை இல்லையா ?

[1979 மார்ச் 27

<u>மாண்புமிகு திரு. க. உறரொ. எட்மண்ட்</u>: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினையைக் கிளப்பி இருப்பதால் அவருக்கு நான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்தேன். அத்தோடு இந்த அவைக்கும்தான் நான் இந்தக் தகவலைத் தருகிறேன். அவர் கொண்டு வந்த காரணத்தால் அவருக்கு இந்தத் தகவலைத் தருகிறேன் என்று சொன்னேனே தவிர வேறல்ல. மேலும் மாண்புமிகு திரு. சி. ஆறுமுகத்தை நான் மிகவும் அதிகமாக மதிப்பவன் என்பது அவருக்கும் தெரியும்.

அடுத்து தகவல்களைச் சொல்கிறேன். தமிழ்நாடு ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் அதாவது சிட்கோ லாபத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு டெய்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது; தமிழ்நாடு டூரிஸம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; தமிழ்நாடு பப்ளிக் ஒர்க்ஸ் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு வேர் ஹவுஸிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; அது உணவுத் துறையின் இன்னொரு நிறுவனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வேர் ஹவுஸிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; தமிழ்நாடு பவுல்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது.

பல்லவன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மெட்ரோபாலிட்டன் சர்வீஸ் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; தர்மபுரி டிஸ்ட்ரிக் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; தமிழ்நாடு அக்ரி. இன்ஜினியரிங் அன்ட் சர்வீஸ் கார்ப்பரேஷன் பெடரேஷன் லிமிடெட் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; பல்லவன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் எக்ஸ்பிரஸ் சர்வீஸ் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; கட்டபொம்மன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது; தந்தை பெரியார் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; பல்லவன் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; மதுரை பாண்டியன் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; சேரன் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது; இப்படி இத்தனை நிறுவனங்கள் லாபத்திலே இன்றைய தினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே நான் அன்றைய தினம் சில பொது நிறுவனங்கள் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன என்று இந்த அவையிலே சொன்னது எல்லாம் முழுக்க முழுக்க உண்மையான தகவல்தான். ஆகவே உண்மையான தகவலைத்தான் நான் சொல்லி இருக்கிறேனே அல்லாமல்

1979 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

உண்மைக்கு அப்பாற்பட்ட தகவலை இந்த அவையிலே நான் நிச்சயமாகக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

தவறான தகவல்களைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் இங்கே இருக்கிறார்கள். உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். தவறுகளை மூடி மறைப்பது என்பது இந்த நாட்டுக்கும் நல்லதல்ல இந்த அரசுக்கும் நல்லதல்ல அதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அவர்கள் சம்பந்தப் படாத விஷயங்களைச் சொல்லுகிறார்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நாம் சம்பந்தப் பட்ட விஷயத்தைப் பற்றித்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயது செய்து ரகுமான்கான் அவர்கள் உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இன்னொன்றையும் நேற்று சொன்னார்கள்—மாலை பத்திரிகை 'அலை ஓசை'யிலும், காலை பத்திரிகை 'முரசொலி' யிலும் வந்திருக்கிறது. முரசொலியில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். ஏதோ வெளி மாநிலத்திருந்து நெல், அரிசி, கொள்முதல் செய்வதில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்று வந்திருக்கிறது. இரண்டு வகையான செய்திகள் இரண்டு பத்திரிகையில் வந்திருக்கின்றன. அலை ஓசை பத்திரிகையைப் பார்த்தால் ஊழல் நடந்திருப்பதாகவும், அதற்கு எட்மண்ட் அவர்கள் மீது உரிமை பிரச்னை வந்திருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றையதினம் காலை பத்திரிகை முரசொலி பத்திரிகையைப் பார்த்தால் ஏதோ ரூ. 5.00 லட்சம் அளவில் ஊழல் நடந்திருப்பதாகவும் அதிலே எட்மண்ட் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தையைக் கூட ரகுமான்கான் அவர்கள் சொல்லவில்லை. ஆனால் இதிலே எட்மண்ட் சம்மந்தப்பட்டிருக்கிறார் என்றும், இந்த அமைச்சரவைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் அந்தப் பத்திரிகை செய்திகள் வந்திருக்கின்றன. நான் சொல்லிக்கொள்வதெல்லாம் இந்தப் பிரச்னை 1978-ம் ஆண்டிலே உணவு மானிய கோரிக்கை மீது அன்றையதினம் இந்த மன்றத்தில் விவாதிக்கிறபோது,

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1979 மார்ச் 27

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினரால் (ப. உ. ச. அவர்களால்) குற்றச்சாட்டு கொண்டு வரப்பட்டு, அதற்கான தீர்மானங்களை இங்கே எடுத்துச்சொல்லி விவாதிக்கிற போது (சிரிப்பு) இந்தச் சிரிப்பிலிருந்து நீங்கள் இந்த விவாதம் நடந்ததாக ஒத்துக்கொள்கிறீர்கள். அதற்காக என் நன்றி. இன்னொன்றையும் மெத்த பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வாங்கப்பட்ட அரிசி நெல் பேரத்தில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். வேண்டுமென்றால் என் பேச்சை படித்துப் பாருங்கள். நீங்கள் உரிமை பிரச்னை கொண்டு வருவதற்கு உரிமை இல்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்லி 1979 ஆம் ஆண்டில் சொல்கிறீர்கள். அவர்கள் சொல்கிறபோது என்னிடம் ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் இப்படி பல முறை ஆதாரங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லியும் அந்த ஆதாரங்களைக் கொடுக்காமல் இருக்கிறார். ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என் பக்கத்தில் இருக்கிறார் என்று எடுத்துச் சொல்லிவிட்டு 1977லிருந்து அதற்கான ஆதாரங்களைக் கொடுக்காமல் இருக்கிறார். அந்தக் கொலையை யார் செய்தார்கள் என்று இன்னும் அவர் சொல்லவில்லை. நான் அதற்கு ஆதாரம் இல்லை என்று சொல்லத் தயாராக இல்லை. ஆதாரம் இருந்தால் காட்டட்டும். இந்த ஊழலில் எட்மண்ட் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று இருந்தால், ஆதாரம் காண்பித்தால், நான் இந்த அமைச்சரவையிலிருந்து வெளியேறுவதிலிருந்து மட்டுமல்ல இந்த மன்றம் தூக்குத் தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

நான் இதை மெத்த பணிவோடு சொல்லுகிறேன். தவறு யார் செய்திருக்கிறார்கள் என்பதை ஆதாரத்தோடு சொல்லுங்கள். அதிகாரிகள் மட்டத்தில் தவறுகள் நடந்திருந்தால் ஆதாரத்தோடு சொல்லுங்கள். இந்த அரசு ஈவு இரக்கமில்லாமல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும். அதிகாரிகள் தவறுகள் செய்வதற்கு எட்மண்ட் உடந்தையாக இருந்தான் என்றோ அல்லது இந்த அமைச்சரவை உடந்தையாக இருந்தது என்றோ குறறச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் இந்த எட்மண்ட் மரண தண்டனையை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறான் என்று சொல்லிக் கொள்கிறேன். வேண்டுமானால் அவர்களுக்கு அவகாசம் தரலாம்,. பல்வேறு ஆதாரங்களை தர இருக்கிறேன் என்று ரகுமாகான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அவர் என்னிடத்தில் தராவிட்டாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களில் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் விசாரணை நடத்தட்

டும். ஊழல் யார் செய்தார்கள் என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கட்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இப்படிப்பட்ட சில ஆதாரமற்ற சில தகவல்களை சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லி, அதன் மூலம் ஏதோ பத்திரிகைகளில் செய்தி வருவதின் மூலம் எவ்வளவு பெரிய ஊழலை இவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள் என்று மக்கள் தங்களை நினைத்துகொள்வார்கள் என்ற ஒரு சிறிய ஆசையை அபிலாஷையை நிறைவேற்றிக்கொண்டதாகத்தான் அமையும் என்பதை தெரிவித்துக்கொண்டு, என் மீது உரிமை மீறல் பிரச்னைக்கு ஆதாரமில்லை. 20-ம் தேதி எடுத்து வைத்த தகவல்கள் அத்தனையும் உண்மையான தகவல்கள், அவைகள் உண்மைக்கு மாறான தகவல்கள் அல்ல என்பதை தெரிவித்துக்கொண்டு, இதில் உரிமை மீறல் பிரச்னைக்கு இதில் இடமில்லை என்பதை பணிவோடு தெரிவித்து அமருகிறேன்.

(திரு. அ. ரகுமான்கான் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக பேசுங்கள்

திரு. அ. ரகுமான்கான் : தங்களுடைய அறிவுரையின் படி மிகவும் ஆத்திரப்படாமல் சுருக்கமாக சொல்லுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது நான் உரிமை மீறல் பிரச்னை எழுப்பி பேசிய நேரத்தில் சரியான தகவல்களை தரவில்லை என்று சொன்னார்கள். உரிமை மீறல் பிரச்னை கொடுத்த போதே அதில் தெளிவாக சொல்லியிருக்கிறேன். மற்ற பொது நிறுவனங்களில் ஊழியர்களுக்கு தரப்படும் ஊதிய விகிதங்களை விட சிவில் சப்ளை ஊழியர்களுக்கு அதிக ஊதியம் தரப்படுகிறது. மற்ற பொது நிறுவனங்களுக்கும் இந்த நிறுவனங்களுக்கும் வித்தியாசம் உண்டு. மற்ற நிறுவனங்கள் எல்லாம் லாபத்தில் நடக்கிறது. ஆகவே சிவில் சப்ளை கார்ப்பரேஷனும் மற்ற நிறுவனங்களைப் போல் லாபத்தில் நடக்கவில்லை. ஆகவே மூன்றாவது சம்பளக் கமிஷனில் உள்ள பெனிபிட்ஸ் தர முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சரியாக தகவல் அல்ல என்று சொல்லியிருக்கிறேன்? இங்கு இருக்கக்கூடிய இன்டஸ்ட்ரீஸ் செக்ரட்டரி கீதா கிருஷ்ணன் அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்......

According to Mr. Geetha Krishnan out of the 42 public sector enterprises in the State, 24 made reasonable profits in the year 1976–77. The 18 losing concerns, he argued, should not be viewed solely from the profit angle,

ஆகவே அரசினுடைய இண்டஸ்ட்ரீஸ் செக்ரட்டரி 18 நிறுவனங்கள் நஷ்டத்தில்தான் ஓடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள், மற்ற நிறுவனங்கள் எல்லாம் லாபத்தில் தான் நடக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இண்டஸ்ட்ரீஸ் செக்ரட்டரி நஷ்டத்தில் நடக்கின்றன என்று சொல்லுகிறார், இந்த 18 நிறுவனங்களில் பி.டி.சி. லாபத்தில் நடக்கின்றதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் நேற்றைய தினம் விளக்கமாகப் பேசிவிட்டீர்கள். இன்றைக்கு பதிவாக வேண்டிய வேறு பிரச்னைகள் இருந்தால் அதை மட்டும் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது 1976–77ஆம் ஆண்டைப்பற்றியது. 1977–78ஆம் ஆண்டைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : 1977–78யை பற்றியும் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அவர்கள் சொல்வது 9–3–1979ம் தேதி வெளிவந்தது. அது என்னிடத்திலும் இருக்கிறது. 'இந்து' பத்திரிகையில் அந்த செய்தி வந்திருக்கிறது. தொழில்துறை செயலர் அவர்கள் பேசும்போது—ஒரு விழாவில்—பேசியிருக்கிறார்கள் :

According to Mr. Geetha Krishnan cut of the 42 public sector ente prises in the State, 24 made reasonable prcfits in the year 1976-77. The 18 losing concerns, he argued, should not be viewed solely from the profit angle.

1976–77ல் நடைபெற்றது இது. அதற்குப் பிறகு 1977–78ல் 22 நிறுவனங்கள் லாபத்தில் ஓடியிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : * * *

Hon. SPEAKER : No, no. Sit down. I won't allow all these things.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடலாம்.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் இத்துடன் போதும். இதைப்பற்றிய தீர்ப்பை பின்னால் அறிவிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச அனுமதிக்க முடியாது.

[முற்பகல் 10.20.]

ரகுமான்கான் பேசிய அத்தனையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு விஷயம், ஸ்டேட்மெண்டு படிக்க வேண்டும். எனவே, ஆவேசப்பட வேண்டாம்... .. ..

திரு. அ. ரகுமான்கான் : என்னைப் பேச அனுமதியுங்கள். அதற்கு வக்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் பொருள் அல்ல. உட்காருங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை தொடங்கியதிலே இருந்து, தெளிவான கருத்துக்கள் வரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதைத் தாங்கள் கூர்ந்து கவனித்தால் விளங்கிக் கொள்ளலாம். சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷன் ஊழியர்கள் கொடுத்த ஒரு மனுவின் அடிப்படையில் இது கிளறப்பட்டது. எனவே, தயவு செய்து அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லாவிட்டாலும், இந்த மனுவின் அடிப் படையிலே ஒரு தகுந்த விளக்கத்தை, இந்த அவைக்குத் தெரிவிக்காவிட்டாலும்கூட, உறுப்பினர் அவர்களுக்குத் தர வேண்டும். காரணம், இந்த மனுவைத் தந்த அவர் அதைக் குறித்து பேச விரும்புகிறார். இதற்குத் தகுந்த விளக்கம் அமைச்சர் அவர்கள் தர வேண்டும். அப்படித் தந்துவிட்டால், அவருக்குத் தேவையான தகவல் கிடைத்து விடும். அப்போது இந்தப் பிரச்னை எழாது. ரகுமான்கான் அவர்கள் அந்த ஊழியர் களுடைய கருத்தைத் தான் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் எழுத்து மூலமாக விளக்கம், தந்துவிட்டால், அவருக்கு திருப்தி அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் அறிக்கை அளிப்பார்கள்.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.